எம்.சி.ஓ.பி எண்: 7312/2018 தேதி: 11.08.2026

மசா. : 3

பெயர் : ஏழுமலை

த/பெ. : சின்னப்பா

வயது : 62

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கைரேகை செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ16 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் நான் கொடுக்கவில்லை. விபத்து குறித்து போலீஸ்சார் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பெயரில் சாட்சி அளிக்கிறேன். விபத்து குறித்து குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சி நான் அளிக்கவில்லை. விபத்து நடந்தது பற்றி எனக்கு மருத்துவமனையில் சேர்த்து சுயநினைவு வந்த பிறகு அன்று இரவு 10.00 மணியளவில் தெரிந்துகொண்டேன். மருத்துவமனையில் மருத்துவர் சொல்லி விபத்து பற்றி தெரியவந்தது. விபத்து சமயத்தில் என்னை எந்த வண்டி இடித்தது என்று எனக்கு தெரியாது. இறந்தவரை எனக்கு சுமார் 10 வருடங்களாக தெரியும். கண்ணுற்ற சாட்சியாக என்னை கருதமுடியாது என்றாலும் மனுதாரர் குடும்பத்திற்கு ஆதரவாக தவறாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கைரேகை பெறப்பட்டது.